ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2067/2 - 2018 අප්‍රේල් මස 17 වැනි අඟහරුවාදා - 2018.04.17

*2067/2 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்க அறிவித்தல்**

*அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை இல. 02/ 2018*

***1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்***

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி கௌரவ பதில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் ஆக்கப்பட்ட பின்வரும் கட்டளை அனைவரும் அறியவென இத்தால் வெளியிடப்படுகின்றது.*

*செல்வி ஜீ. டீ. சீ. ஏக்கநாயக்க,*
*பதில் செயலாளர்,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2018, ஏப்பிறல் 17.*

***1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்***

*கட்டளை*

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரும் பதில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சருமாகிய மலிக் சமரவிக்கிரம ஆகிய நான், 2018, ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதி தொடக்கம் செயல்வலுவுக்கு வருமாறு இதற்கான அட்டவணையின் 3 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள் ஒவ்வொன்றின் மீதும் அட்டவணையின் 5 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள பொது வீதத்தில் அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) அட்டவணை 'அ' இன் ஏற்பாடுகளின் கீழுள்ள முன்னுரிமை வீதமொன்று விதிக்கப்பட்டு செலுத்தப்படக்கூடியதாக இருக்குமிடத்து அவ்வட்டவணையின் 4 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள முன்னுரிமை வீதத்தில் இறக்குமதித் தீர்வையைக் கோரி அறவிடுமாறு சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களை, இக்கட்டளை மூலம் கேட்டுக்கொள்கின்றேன்.*

*மலிக் சமரவிக்கிரம,*
*அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்*
*மற்றும் பதில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2018, ஏப்பிறல் 17.*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| இ. ப. த. இல. (1) | இ. மு. குறியீடு (2) | | விவரணம் (3) | சுங்கத் தீர்வை முன்னுரிமை (4) | சுங்கத் தீர்வை பொது (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| 71.08 | | | **தங்கம் (பிளாட்டின முலாம் பூசப்பட்ட தங்கம் உட்பட) வேலைப்பாடற்றவை அல்லது குறையுற்பத்தியாக்கப்பட்ட நிலையிலுள்ளவை அல்லது பொடி நிலையிலுள்ளவை** | | | |
| | | - | நாணயம் சாராத : | | | |
| | 7108.11 | -- | பொடி நிலையில் | (IN) இலவசம்<br>(PK) இலவசம்<br>(SF) 4☐ | 15☐ | கி. கி. |
| | 7108.12 | -- | பிற வேலைப்பாடுகளற்ற நிலையில் | (IN) இலவசம்<br>(PK) இலவசம்<br>(SF) 4☐ | 15☐ | கி. கி. |
| | 7108.13 | -- | பிற குறையுற்பத்தியாக்கப்பட்ட நிலையில் | (IN) இலவசம்<br>(PK) இலவசம்<br>(SF) 4☐ | 15☐ | கி. கி. |
| | 7108.20 | - | நாணயம்சார்ந்த | (IN) இலவசம்<br>(PK) இலவசம்<br>(SF) 4☐ | 15☐ | கி. கி. |

05-33

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.